குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**STC.No.36/202**3

வழக்கு சாட்சி எ.மா.சா.1

2025ம் நவம்பர் மாதம் 07–ம் நாள் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய 1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.Rajendran, Assistant என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வாசுதேவன் | தொழில் | |
| த/பெ(அ) க/பெ. | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

**(Accused present).**

நாள்: 07.11.2025

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் அரசு பள்ளி ஆசிரியர் என்றால் சரிதான். நான் எத்தனை வருடமாக பணிபுரிந்து வருகிறேன் என்றால் 19 ஆண்டுகாலமாக பணிபுரிந்து வருகிறேன். நான் வேலையில் சேர்ந்த காலம் முதல் வங்கி கணக்கு வைத்துள்ளேனா என்றால் இல்லை. அதன்பிறகு தான் 15 வருடங்களுக்கு மேலாக வங்கி கணக்கு வைத்துள்ளேன். காசோலை மூலமாக பண பரிவர்த்தனை செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள EX.D.1 Register க்கும் குற்ற முறையீட்டாளருக்கும் எனக்கும் நடந்த பரிவர்த்தனைக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு காசோலைகள் பற்றி EX.D.1 எந்த குறிப்புகளும் இல்லை என்றால் சரிதான். ஒரு காசோலையை பொருத்து ஒரு நீதிமன்றத்தில் தான் வழக்கு தாக்கல் செய்ய முடியும் என்றால் சரிதான். இதே காசோலைக–ளுக்காக எழுமாத்தூர் குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றமுறையீட்டாளர் மனைவி ராதிகா வழக்கு தொடர்ந்துள்ளார். அந்த வழக்கு பொய்யான வழக்கு என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது என்றும், அந்த வழக்கு எண் STC.No. 125/2024 ல் கூறியுள்ளேன் என்று கூறியிருப்பது பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. STC.No. 125/2024 வழக்கு ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காசோலைகளை RD Finance தர்மராஜ் என்பவரிடம் தான் காசோலைகளை கொடுத்துவைத்துள்ளேன் என்று சொல்லியுள்ளேன். ஆனால் அவா மீது நான் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தோ காவல் துறையில் புகார் செய்தோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. குற்றமுறையீட்டாளருக்கும் மகளிர் சுயஉதவிக்குழுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு காசோலைகள் என்னாலோ அல்லது என்னை சார்ந்த

நபர்களாலோ பூர்த்தி செய்து குற்றமுறையீட்டாளருக்கு கொடுக்கப்பட்டது என்றும் வழக்கிற்காக நான் பூர்த்தி செய்து கொடுக்கவிலலை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொய் கிடையாது உண்மை. நான் கையெழுத்து மட்டும் தான் போட்டுக்கொடுத்தேன். நான் பூர்த்தி செய்யவில்லை. நான் வாதியிடம் பணம் வாங்கினேன் என்றும், அதற்கு ஆதரவாகத்தான் காசோலை கொடுத்தேன் என்றும், வழக்கு தாக்கல் செய்கிறேன் என்றும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பணம் வாங்கவில்லை. அதற்காக நான் காசோலைகளை கொடுக்கவில்லை. எனது மனைவிக்கு வங்கி கணக்கு உள்ளதா என்றால் தற்போது தான் உள்ளது. என் மனைவிக்கும் RD Finance க்கும் வரவு செலவு இருந்திருந்தால் என்மனைவி காசோலைகளை கொடுத்திருப்பார் என்றும் என்னுடைய காசோலையை தரவேண்டிய அவசியமில்லை என்றால் அப்போது என் மனைவியிடம் காசோலை எதுவும் இல்லை. நான் சொல்வது பொய் என்றும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

/ Sd /– A.K. Padmapriya
Judicial Magistrate
Kumarapalayam